2022 மார்ச் 23]

கட்டடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. மாமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட இதே கேள்வியை, நான் கடந்த காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் கேட்டேன்; வக்ஃப் வாரியத்தில் உறுப்பினராக இருந்த காலத்தில், திருநெல்வேலி போன்ற பகுதிகளில் இருந்து சென்னைக்கு வருவது சிரமமாக இருக்கின்றது; மதுரையில் ஒரு தீர்ப்பாயம் உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். அந்த கோரிக்கையைத்தான் உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தி சொல்லி உள்ளார்கள். உண்மையிலேயே அது வரவேற்கக்கூடியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில்தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் தனியாக சிறுபான்மையினர் நலனிற்காக ஒரு அலுவலரை நியமிக்கின்ற பொறுப்பினை முதல் கட்டமாக 5 இடங்களுக்கு வழங்கியுள்ளார்கள். நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

உள் விளையாட்டு அரங்கம்

***3267—திரு. கே.எஸ். சரவணக்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2022 மார்ச் 23

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியோடு விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதி, சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில், கட்டப்பட்ட உள் விளையாட்டு அரங்கம் கொரோனா நோய்த் தொற்றின் காரணமாகத் திறக்கப்படாமல் இருந்தது. தற்போது மாணவர்களின் பயன்பாட்டிற்கு விரைவில் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.

திரு. கே.எஸ். சரவணக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வணக்கம். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகின்றேன். இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டியாகத் திகழும் முதல்வர்களின் முதல்வரான மாண்புமிகு தளபதியார் அவர்களை வணங்குகின்றேன். எங்களின் இளைய கலைஞர், இளைய சூரியன், கழக இளைஞரணிச் செயலாளர் அண்ணன் உதயநிதி அவர்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.

திரு. கே.எஸ். சரவணக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் நகரில் அமைந்துள்ள விக்டோரியா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி 1859 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இங்கு 1,200 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் விளையாட்டு மைதானம் 5 ஏக்கர் 25 சென்ட்டில் அமைந்துள்ளது. இங்கு உள் விளையாட்டு அரங்கம், தடகள ஓடுதளம், மைதானத்தைச் சுற்றி மின் விளக்கு, பார்வையாளர் மாடம், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதி உள்ளிட்டவற்றை ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும், பழுதடைந்துள்ள உடற்பயிற்சிக் கூடத்தை சீரமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

2022 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையான உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்த வேண்டும் என்பது அவர் மட்டுமல்ல, பல சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்கின்ற ஒன்றுதான். அதற்காக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு பேராசிரியர் அன்பழகனார் அவர்களின் பெயரில் மேம்பாட்டு வளர்ச்சி நிதியின்கீழ் 18,000 வகுப்பறைகளுக்கு 7,000 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் கோரிக்கை கொடுத்திருக்கின்றீர்கள். கண்டிப்பாக, இந்த 5 வருட காலத்தில் படிப்படியாக அவை அனைத்தும் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.*

திரு. கே.எஸ். சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

விளையாட்டு மைதானம்

***15212—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—